# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*



## 'நம் துக்கத்தில்' இயேசுவை காண்பதே நம் சந்தோஷம்!

"உங்கள் துக்கம்" சந்தோஷமாக மாறும்! என்றே இயேசு வாக்குரைத்தார்! (யோவான் 16:20). உலக மாந்தருக்கோ 'லௌகீக சந்தோஷம்' தவிர, **துக்கத்தின் உயர் மதிப்பு** தெரியாது! என, இதே வசனத்தில் இயேசு கூறினார். 'தேவ மாந்தர்களாகிய' நாமோ, துக்கத்தின் நடுவில் **'இயேசுவை' காண்கிறபடியால்,** நம் துக்கம்.... எதுவாயிருந்தாலும், நம் இருதயம் சந்தோஷமடைகிறது! இயேசுவோடு கொண்ட ஐக்கியத்தில் விளையும் 'இந்த சந்தோஷத்தை' எதுவும் எடுத்துப்போட முடியாது! என, இயேசு உறுதியளித்தார்! (யோவான் 16:22).

சிறைச்சாலையில் யோசேப்பு இருந்தார்.... கர்த்தரும் யோசேப்போடு இருந்தார்! என 'சிறைச்சாலை' மாறுவது சந்தோஷமன்றோ! (ஆதி.39:21,22). இயேசுவின் ஆத்துமா கலங்கிய வேளையில், பிதா தன் சமூகத்தை அருளி 'மகிமைப்படுத்தினேன்' என முழங்கியதல்லவோ நித்திய சந்தோஷம்! (யோவான் 12:27,28). அல்லேலூயா!

*-tr*

பெட்டகம் 22 மே - ஜூன் 2020 பரல்கள் 5,6



## ‘நம்மை ஊடுருவி உணர்த்தும்’ இயேசுவின் கண்கள்!

தினசரி தேவனுடைய சமூகத்தை தேடும் நாம், **அவர் சுட்டிக்காட்டும் பாவத்தை** மழுப்பி அதற்கு மாற்றுபெயர் வைத்து அழைக்காதிருப்போமாக. இதுவரை நமது பாவங்களை மறைத்து வாழ்ந்ததற்கு முற்றுப்புள்ளி வைத்திடக்கடவோம்! “அவனுடைய ஆத்திரமே பேய்த்தனமானது.... என்னுடைய கோபமோ நியாயமானது! என் மனைவிதான் தொட்டதற்கெல்லாம் சினுங்குவாள்.... நானோ என் நரம்பு தளர்ச்சியால் எரிச்சல் அடைந்தேன்! அவன் பேராசைக்காரன்.... எனக்கோ என் வியாபாரத்தை விஸ்தாரப் படுத்தினேன்! அவனுக்கு உணரமுடியாத கல்நெஞ்சு.... நானோ சீக்கிரத்தில் உணர் வடைபவன்! அவன் பேசுவது பெருமை.... நானோ ‘மேலான ருசியை’ மாத்திரமே பேசுகிறவன்!”. இவ்வாறாக எதையெல்லாமோ பேசி மழுப்பிவிட்டு, நம்மை மறைத்துக் கொள்ளவே விரும்புகிறோம்! ஆனால், நம்மை ஆவியானவருக்கு முன்பாக நிறுத்தி விட்டால், **அவர் எதையும் விட்டு வைக்கமாட்டார்! நாம் வஞ்சிக்கப்பட இடம்தர மாட்டார்!** மாறாக, சர்வவல்லவரின் ஆராய்ந்து அறியும் கண்களுக்கு முன்பாக நிறுத்திவிடுவார்!

தேவனுடைய கிருபையை பெற்றவர்கள் மாத்திரமே “இவன் தன்னை தவிர எல்லோரையும் நேசித்தான்!” என்ற சாட்சி பெற்றிருப்பார்கள்! இந்த சாட்சியை பெறுவது, கிறிஸ்துவின் கிருபைக்குள் சாத்தியமே ஆகும்!

*-Ed*


2- மாத கொரோனா ஊரடங்கினிமித்தம் “மே - ஜுன்” என பத்திரிக்கை வெளியாகியுள்ளது!

**‘பரலோக பொக்கிஷங்கள்’** வருடசந்தா ரூ.150.00

ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## 'தனிமை' அகற்றும் குடும்பமே அவரது சபை!

*தேவன் தமது சபையை 'ஓர் குடும்பமாய்' கட்டுகிறார் என்ற சத்தியம் சங்கீதம் 68:5,6 வசனங்கள் நேர்த்தியாய் போதிக்கிறது! 'தனிமை' என்ற உணர்வு கொண்டவர்களே, தேவனால் ஒன்று சேர்க்கப்படுகிறார்கள்! அப்படியொரு உணர்வை 'உலக சிநேகம்' கொண்டவர்கள் பெற்றிருக்க மாட்டார்கள்! தேவனுடைய கிருபையைப் பெற்ற நாமே, தனிமையிலிருந்து, ஓர் தேவ குடும்பமாய் கட்டப்படும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்!*

### 1. தனிமையானவர்களுக்கு தேவன்

*'தேவன் திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன்' என சங்கீதம்.68:5-ம் வசனத்தில் வாசிக்கிறோம். யாரெல்லாம் தகப்பனில்லாதவர்களாயிருக்கிறார்களோ, அவர்களுக்கு தகப்ப னாயிருந்திட தேவன் விரும்புகிறார்! தகப்பனற்ற அனாதைப் பிள்ளைகளின் நிலைமை என்ன என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அவர்கள் எப்போதுமே ஒரு* **பாதுகாப்பற்ற நிலையி லிருப்பார்கள்.** *இவ்வித பாதுகாப்பற்ற நிலையிலிருக்கிறபடியால், அவர்களைத் திருத்துவதற்கு யார் முயன்றாலும், உடனே தங்கள் எதிர்ப்பை தெரிவிப்பார்கள். இந்நிலையில் உள்ள யாராயிருந் தாலும் 'நான் ஒரு அனாதை!' என்றே கூற வேண்டும். மேலும், தகப்பனை உடையவன், எதிர்காலத்தைப் பற்றிய கவலையற்று இருப்பான். ஒரு அனாதையோ 'நாளை என்ன நடக்குமோ?' என்ற மனக்கிலேசத்திலிருப்பான்.*

> **தேவனை உங்கள் சொந்த தகப்பனாய் கொண்டிருப்பதற்கும், திரளான 'அனாதைகளின் தலைவரைக்' கொண்டிருப்பதற்கும் ஏராளமான வித்தியாசம் உள்ளது.**

*தகப்பனாயிருக்கும் தேவனோ, நீங்கள் ஒருவர்தான் அவருடைய பிள்ளையைப்போல உங்களைப் பாதுகாப்பார்! உங்களைக் குறித்து சிந்தித்து திட்டமிடுவதற்கென உங்களுக் காகவே ஏராளமான நேரம் வைத்திருக்கிறார். மெய்யாகவே, திக்கற்ற வர்களாய் அவரிடம் வந்து சேர்ந்த அனைவருக்கும் அவர் தகப்பனாயிருக்கிறார். மேலும், தேவன் 'விதவைகளை விசாரிக்கிறவர்' எனவும் வாசிக்கிறோம் (சங்.68:5). லூக்கா 18-ம்*

அதிகாரத்தில் 'ஒரு விதவையை' இயேசு குறிப்பிட்டார். அவளுடைய ஆஸ்தியைப் பறித்துக்கொண்ட ஒருவனைக் குறிப்பிட்டு, கணவனில் லாத தனக்கு நியாயம் செய்ய வேண்டும் என நீதிபதியிடம் மனு கொடுத்தாள். அதை கவனிக்காது, தனக்கு நேரமில்லையென்று கூறிய அந்த நீதிபதி, 'அவள் திரும்பத் திரும்ப வந்து' அலட்டியதினிமித்தம் இறங்கி வந்து நீதி செய்தான். ஒரு கடின உள்ளம் கொண்ட உலக நீதிபதி இவ்வாறு நியாயம் செய்யக்கூடுமென்றால், தேவன் தன்னுடைய சொந்தப் பிள்ளைகளுக்கு நியாயம் செய்யாமலிருப்பாரோ? என இயேசு குறிப்பிட்டார்! ஆனால் இன்றுள்ள துயரம் என்னவென்றால், "என்னுடைய சொந்தப் பிள்ளைகளுக்காக நியாயம் செய்ய நான் வரும் போது **தகப்பனாகிய என்மீது அவர்களிடம் விசுவாசம் இருக்குமோ?"** என்றே அந்த வசனத்தில் அங்கலாய்த்தார்! இங்கு குறிப்பிடப்பட்ட விசுவாசம் என்னவெனில், எத்தனை முறை எனக்கு பதில் கிடைக்காவிட்டாலும், நான் திரும்பத் திரும்ப என் தகப்பனிடம் செல்வேன்! என்ற உறுதியான விசுவாசம்!

தேவனிடம் கொண்டிருக்கும் ஜெபம் என்ற பகுதியில் 'இடைவிடாது ஜெபிக்கும்' பங்கை ஏன் தேவன் வைத்தார்? என்பது எனக்குத் தெரியாது. அது ஏனென்றால், சாதாரண உலக தகப்பன் அல்லது தாய், தன்னிடத்தில் தன் பிள்ளைகள் உணவு கேட்கும்போது "அம்மா சோறு வேண்டும்! அம்மா சோறு வேண்டும்!" என இடைவிடாது கேட்கும் படி விரும்ப மாட்டார்கள். பசித்தவுடன் சோறு கொடுப்பார்கள். ஆனால் இயேசு ஜெபத்தைக் குறிப்பிடும் இரண்டு இடங்களில் **'இடைவிடாது ஜெபிப்பதையே'** வலியுறுத்தியுள்ளார். முதலாவது பங்காக, லூக்கா 18-ம் அதிகாரத்தில், ஒரு விதவை தனக்கு நியாயம் வேண்டி 'இடைவிடாது' சென்று வேண்டிக் கொண்டதை குறிப்பிட்டார். அது அவளுக்குச் சொந்தமான நியாயம்! ஆனால் லூக்கா 11-ம் அதிகாரத்தில் 'மற்றவர்களுக்காக இடைவிடாது' ஜெபித்த ஓர் ஜெபத்தைக் குறிப்பிட்டார். **அது தனக்கல்ல, தன் சிநேகிதரின் தேவைக்காக செய்த ஜெபம்.** அங்கும் 'இடைவிடாது ஜெபிப்பதை' இயேசு குறிப்பிட்டுள்ளார்.

ஒரு இரவு 12 மணிக்கு வந்த ஒருவருக்கு, வீட்டில் உணவில்லாது இருப்பது சகஜம்தான். ஆனால் அவரோ, தன் பக்கத்து வீட்டு நண்பரிடம் கேட்டு வாங்குவதற்குச் சென்றார். பிறருக்காய் ஜெபிக்க வேண்டிய நிலையில் உள்ள அனைவரும் முதலாவதாக அந்த பிறரைக் குறித்த **'அன்பும் பாரமும்'** கொண்டிருக்க வேண்டும். கதவைத் தட்டியும் கதவைத் திறக்காத பட்சத்தில் திரும்பத் திரும்ப கதவை 'உணவுக்காக

*தட்டுவது’ ஒரு வெட்கமான காரியமாய் தோன்றுகிறது! நம் யாவருடைய ஆவிக்குரிய நிலையில், இந்த உவமையை* **‘பரிசுத்தா வியைக் கேட்பதைக் குறித்தே’** *இயேசு குறிப்பிட்டார். இதுபோன்ற நிலையில்தான் நானும் ஒரு காலத்திலிருந்தேன்!*

**அங்கும் இங்கும் பிறருக்காக நான் பிரசங்கிக்கச் சென்றாலும், பிறரை ஆசீர்வதிக்க என்னிடத்தில் வல்லமை இல்லாதிருந்ததைக் கண்டேன். அதை தேடிச் சென்ற பெந்தெகொஸ்தே கூட்டங்களில் ‘அந்நிய பாஷை பேசுவதை’ அவர்கள் பிரதானமாய் கொண்டிருந்தார்களே அல்லாமல் மெய்யான வல்லமை அங்கு காணப்படவில்லை!**

*ஆகவே நான் தேவனிடமே சென்று, பரிசுத்தாவியின் வல்லமைக் காய் தொடர்ந்து ஜெபித்து, பின்பு பெற்றுக்கொண்டேன். இவ்வாறு, இந்த இரண்டு உவமைகளிலும் ‘இடைவிடாது தொடர்ந்து ஜெபிப்பதை’ இயேசு வலியுறுத்தியுள்ளார்.*

**2. தனித்தவளுக்கு கணவர்!**

*தேவன், தகப்பன் இல்லாதவர்களுக்கு தகப்பனாய் மாத்திரமல்ல, கணவனில்லாதவர்களுக்கு கணவராய் அல்லது நாயகராயும் இருக்கிறார்! என, ஏசாயா 54:5-ம் வசனம் கூறுகிறது. இன்னமும் அநாதைகளாய் இல்லாமல், தேவனுடைய சொந்த குமாரர்களாய் வாழுகின்ற யாவருக்கும் ‘கணவனில்லாத விதவைக்கு ஓர் மணவாள னாயும்’ அவர் மாறுகிறார்! இது எப்படியெனில்* **‘நாம் யாவருமே’** *ஒரு காலத்தில் பழைய மனிதனோடு திருமணம் கொண்டிருந்தோம். அந்த பழைய மனிதன் மரித்து விட்ட நிலையில், விதவையைப் போல் இருக்கும் நாம் யாவருமே, கிறிஸ்துவை மணந்து கொள்ளும் பாக்கியம் பெற்றிருக்கிறோம்!*

**3. இறுதியாக, நாம் அனைவரும் இணைந்த குடும்பமே சபை!**

*இந்த நிலையில்தான் தொடர்ந்து சங்கீதம் 68:6-ம் வசனத்தில்* **“தனிமையானவர்களுக்கு தேவன் ஓர் வாசஸ்தலம் கட்டுகிறார்!”** *என்ற ‘நிறைவை’ வாசிக்கிறோம். இந்த வசனம், இந்த பூமியில் தேவன் அமைத்துதரும்* **சபையாகிய குடும்பத்தை** *அழகூட்ட சித்தரிப்பதா யிருக்கிறது! அந்த சபை “தனிமையானவர்கள் இசைந்து வாசம் செய்திட உகந்த வீடாயிருக்கிறது!”. என்னுடைய முந்திய நாட்களில், சில வருடங்களாய் நான் இருந்த ஒரு சபை, வேத வாக்கியங்களை ஆராய்வதும், பின்பு அதில் பரீட்சை வைப்பதும் போன்ற காரியங்களில் ஆர்வமாயிருந்தார்கள். நானோ அங்கு ஒரு தனிமனிதனாய் இருப்பதைப் போலவே உணர்ந்தேன்! மெய்யான சபை ‘தேவனுடைய வீடாய்’ இருக்க வேண்டும். உங்கள் நகரத்தில் ஐந்து லட்சம் பேர்*

இருந்தாலும், அவர்கள் அனைவருமே தனிமையில்தான் இருக்கிறார்கள். ஒருசமயம், ஒரு மனிதன் தற்கொலை செய்து கொண்டபோது அவருடைய சட்டைப் பையில் அவன் எழுதிவைத்த வாசகத்தில் "தனிமை என்னை வாட்டியது. பல ஆயிரம் ஜனங்களை நான் கடந்து சென்றாலும், அவர்களில் ஒருவராது என்னைப் பார்த்து புன்னகை செய்ததில்லை!" என குறிப்பிட்டிருந்தார். நம்மைப் பார்த்து யாராவது புன்னகைக்க மாட்டார்களா? என நாம் பொதுவாய் எண்ணுவதில்லை. ஆனால் அந்த மனிதனுடைய உணர்வுக்கு ஒப்பாய், நாம் அனைவருமே, அவரவர் "தனிமையாய் இருப்பதை" உணருகிறோம்!

ஒரு சிறு குடும்பத்தில், தாய் தகப்பன் உட்பட ஐந்து ஆறுபேர் இருந்தாலும் அது ஒரு குடும்பமாகிய சபைதான்! இன்று ஜனங்கள் மனதில் வைத்திருப்பதெல்லாம் ஆயிரக்கணக்கான நபர்கள் கூடுவதையே ஒரு பெரிய சபை என எண்ணுகிறார்கள். ஆனால், அது அப்படி அல்ல! நீங்கள் ஆயிரமோ அல்லது நூறுபேரோ அல்லது ஐம்பதுபேரோ கூடுகிற சபையாயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல! ஆனால் "நீங்கள் ஒருவரையொருவர் நேசித்தால் மாத்திரமே நீங்கள் என்னுடைய சீஷர்கள் என எல்லோரும் அறிந்து கொள்வார்கள்" என இயேசு கூறினார்.

**இதற்கு நேர்மாறாக, ஆயிரக்கணக்கில் ஜனங்கள் கூடுவதும், கார் பார்க்கிங்கில் நிறைய கார் வந்து நிற்பதும் 'சபை' என எண்ணுவது மதியீன எண்ணமாகும். ஆனால் ஒருவரையொருவர் நேசிக்கும் ஒரு குடும்பத்தை போன்ற சபையே, உலகெங்கும் காணப்பட வேண்டுமென தேவன் விருப்பம் கொண்டுள்ளார்!**

"சுமார் பத்தாயிரம் பேருக்கு சுவிசேஷம் கூறியுள்ளேன்" என உரைத்த சுவிசேஷகர்களிடம் நான் இவ்வாறு கேட்டிருக்கிறேன். "அந்த பத்தாயிரம் பேர் எங்கே?". அவர்கள் எங்காவது சபைக்கு சென்றிருப்பார்கள், எனக்குத் தெரியாது! எனக் கூறினார்கள். ஆனால் வேதம் அப்படிக்கூறவில்லை. நீங்கள் அப்போஸ்தலனாகிய பவுலிடம் சென்று "நீங்கள் பிலிப்பிய பட்டணத்திற்கு ஊழியம் செய்ய சென்றீர்கள், இன்றும் பல நாடுகளுக்கு சென்று ஊழியம் செய்தீர்கள், அவர்கள் எங்கே?" எனக்கேட்டால் 'இதோ, அந்தந்த ஸ்தல இடங்களில் சீஷர்களாய் கூடி வருகிறார்கள்' என்றே கூறுவார். சபை என்பது, அப்படி ஒரு குடும்பமாயிருக்க வேண்டும். அதுபோன்ற ஒரு குடும்பத்தில் ஐந்துபேர் இருக்கலாம்! அல்லது ஐம்பது பேர் இருக்கலாம்! அல்லது ஐந்நூறு பேர் இருக்கலாம்! ஆனால் இன்று சபையை அதுபோன்ற குடும்பங்களாய் காண முடியவில்லை.

இன்றுள்ள சபைகள், பெரிய நிறுவனங்களைப் போலவே

*காணப்படுகிறார்கள். பெரிய கம்பெனிகளில் CEO என்ற தலைவரை நியமிப்பார்கள். அவர் பல்வேறு விளம்பர யுக்திகளைக் கையாண்டு கம்பெனிகளை நடத்துவார். அதுபோலவே ஒரு குழுவாய் கூடி இருக்கும் ஜனத்திற்கு 'பாஸ்டரை' நியமனம் செய்கிறார்கள். அவர் வந்து பிரசங்கித்து விட்டு, மாதம் மாதம் சம்பளம் வாங்கிச் செல்வார். ஒரு சபை அப்படி இருக்குமென்றால், அது தேவன் விரும்புகிற குடும்பம் அல்லது வாசஸ்தலம் அல்ல! ஏதாவது ஒரு குடும்பத்தில் ஒரு தாய் தன் பிள்ளைகளைப் பார்த்து "பிள்ளைகளே நம் குடும்பத்தை நடத்துவதற்கு* **எந்த அப்பாவை கூலிக்கு வைத்துக் கொள்ளலாம்?**" *என கேட்பதாக நம்மால் சிந்திக்கக்கூட முடியாது! சபைகளை ஸ்தாபித்த அப்போஸ்தலனாகிய யோவான், தன்னை அறிமுகப்படுத்தும்போது* "**உங்கள் சகோதரனாகிய *யோவான்***" *என்றே, அறிமுகப்படுத்தினார். யாதொரு பட்டத்தையும் தங்களுக்கென்று வைத்துக்கொள்ளாத 'தகப்பன்மார்களாகவே' சபையில் இருந்தனர்.*

**மேலும், ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை நிச்சயமாய் கடிந்து பேசுவான். அது ஏனென்றால், அவன் அவர்களின் தகப்பன்!**

*அன்பான சகோதரிகளே, சபையில் யாரோடும் பேசாமல் தனிமையாயிருக்கும் சகோதரிகளை நீங்கள் ஏன் அவர்களுடன் பேசி உற்சாகப்படுத்தக்கூடாது! இவ்வாறுதானே நாம் குடும்பமாய் கட்டப்பட முடியும்? நாங்கள் ஆரம்பத்தில், எங்கள் வீட்டில் கூடி வந்த சபையிலிருந்த யாவருமே அநேக விஷயங்களில் பூரணமற்றவர்களா யிருந்தோம். ஆனால் ஒன்று மாத்திரம் நாங்கள் யாவரும் பொறுப்புடன் நடந்து கொண்டோம். அந்த ஒன்று* "**ஒருவரையொருவர் நேசிப்பதாகும்**". *ஆகிலும் அநேக தவறுகளின் மூலமாய் நல்ல பாடங்களை கற்றுக் கொண்டோம். தனக்கென்று ஆதாயம் தேடி சபைக்குள் பிரவேசித்த வர்களால் பல கஷ்டங்கள் அடைந்தோம். ஆகிலும் இவ்வித பூரண மற்ற வழிகளின் மூலமாய் ஒரு குடும்பமாய் கர்த்தர் எங்களை நடத்தி னார்! கர்த்தர் சபையை நாட்டி வளர்த்தபடியால் உள்ளே பிரவேசித்த தீய சகோதரர்களால் தீங்கு ஏற்படாதபடி கர்த்தர் காத்துக் கொண்டார்.*

**இன்று அநேகர், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தோடு சேராமல் தனி நபர்களாய் வாழ்கிறார்கள். இவர்கள் தங்களை 'பின்மாற்றம் அடைந்தவர்களாய்' காட்டிக் கொள்ளாதிருக்கவே சபைக்கு வருகிறார்கள்! ஆனால், இயேசுவைப் பின் தொடரும் மெய் சீஷனாய் மாறுவதற்கு விருப்பம் இருப்பதில்லை!**

*தானியேல் ஒரு நல்ல மாதிரியாய், தன்னுடைய உண்மை யினிமித்தம் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவருக்கும்*

*தலைமை ஏற்கும் மூத்த சகோதரனாய் கர்த்தர் உருவாக்கினார். அதற்கு காரணம், தனித்திருந்த இந்த மூன்று பேரையும் உற்சாகப்படுத்தி ஊன்ற கட்டுவதற்கு தானியேல் செய்த பிரயாசங்கள்! தானியேல் அவர்களுக்கு முன் வாழ்ந்த 'கொஞ்சத்தில் உண்மையாயிருந்த ஜீவியம்' அந்த மூன்று சகோதரர்களை உற்சாகப்படுத்தியது! தேவன் விலக்கி வைத்த உணவைப் புசியாமல் இருப்பது! மதுவை ஏறிட்டுப் பாராமலிருந்தது! இன்னும் அவரோடு அவர்கள் தங்கியிருந்த அறையில் சின்னச் சின்ன விஷயங்களில் உண்மையாய் நடந்து கொண்டது! ஆகிய யாவும் தனிமையாயிருந்த அந்த மூன்று பேரையும்,* **ஓர் சீஷத்துவ சபையாய்** *தானியேல் உருவாக்கி சேர்த்துக் கட்டுவதற்கு உதவியது!*

*ஓர் சிறு சபையாய் கூடிய இந்த நான்கு பேரும், அன்றிருந்த பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தையே அசைத்து விட்டார்கள். இவர்கள், ஒரு சந்ததியை ஆண்ட நேபுகாத்நேச்சார் அரசனை வென்று, அடுத்த சந்ததிக்கு வந்த தரியு ராஜாவையும் தேவனுக்கு சாட்சியாய் ஜெயங் கொண்டு வாழ்ந்தார்கள்! இத்தனைக்கும் காரணம், சபையைக் கட்டு வதற்கு எழுந்த ஒரு தனி மனிதனே ஆகும்! இந்த தானியேல், மனுஷ ருடைய கனத்தைத் தேடவில்லை! அவர்களின் அங்கீகாரத்தையும் நாடவில்லை! எந்த எதிர்ப்புகளும் அவரை தளரச் செய்யவில்லை! இவ்வாறு தானியேலைப் போலவே நீங்களும் இருந்து விட்டால், உங்கள் நாட்களிலும் தேவனுக்குப் பெரிய காரியங்களைச் செய்வீர்கள். அதுபோன்ற* **சேர்த்து கட்டும் சபை ஊழியமே** *நித்தியத் திற்கும் நிலைத்திருக்கும். இவர்கள், பாவத்திற்கு கட்டுண்டவர்களை விடுதலையாக்குவது மாத்திரமல்லாமல், அவர்களைத் தேவனுடைய சுதந்திரத்தில் ஐசுவரியம் கொண்டவர்களாயும் மாற்றுவார்கள்!*

*ஒருவர் என்னிடம், நான் பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்காக 14 வருடங்கள் தேடியும் பெற்றுக்கொள்ளவில்லை எனக்கூறினார். தன்னிடம் கேட்பவர்களுக்கு பரிசுத்தாவியை தருவதற்கு தேவன் தாமதமாயிருப்பாரா? ஒருக்காலும் இல்லை! ஒருவன் முழு இருதயத் தோடு தீவிரமாய் தேடாமல், அவனுடைய ஏனோதானோ என்ற மனநிலையே பரிசுத்தாவியை அவன் பெற முடியாததற்கு காரணம்! அதுபோலவே சபையில் பிறரை ஆசீர்வதிப்பதற்கு "விசேஷமாய் தீர்க்க தரிசன வரத்தை விரும்புங்கள்" என வாசிக்கிறோமே (1கொரி.14:1). அதுபோன்ற தீராத விருப்பம் உங்கள் உள்ளத்தில் இல்லையென்றால், உங்கள் ஜெபத்திற்கு தேவன் எவ்வாறு பதில் தருவார்? நீங்கள் ஜனங்களை நேசிப்பவராக இருந்தால், அவர்களை போஷிக்க வேண்டு*

மென்ற விருப்பத்தோடு 'தீர்க்கதரிசன வரத்தை' வாஞ்சையுடன் தேட நாடுவீர்கள்! அப்படி இல்லாதபடி, நான் இப்பொழுது ஜனங்களிடம் 30 நிமிடம் பேச வேண்டும். 15 நிமிடம் பேசிவிட்டேன், இன்னும் 15 நிமிடம் பேசவேண்டும்! இன்னும் பேசி முடியவில்லை.... இன்னும் 5நிமிடம் அதிகம் பேச வேண்டியிருக்கிறதே.... என்றெல்லாம் நேரத்தைப் பார்த்துப் பார்த்து நேரத்தை பூர்த்தி செய்யும் பிரசங்கமா நமக்குத் தேவை? இதுபோன்றவர்கள் ஜென்மத்திற்கும் சபையாகிய குடும்பத்தை கட்டமாட்டார்கள்! இதுபோன்ற மூப்பர்களைக் கொண்ட சபை, ஒரு பரிதாபமான சபை என்றே கூற வேண்டும்.

ஆகிலும் அங்கு அமர்ந்திருக்கும் ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ, தேவனிடத்தில் சென்று 'தீர்க்கதரிசன வரத்தைக்' கேட்டு பெற்றுக் கொண்டு.... **பிரசங்க மேடையில் ஏறாவிட்டாலும்,** ஏதாவது ஒரு வகையில் சபையைக் கட்டுகிறவர்களாய் மாற வேண்டும். ஒரு தாய் தன் வீட்டிலுள்ள பிள்ளைகளுக்கு தீர்க்கதரிசனம் கூற முடியும்! சபையில் சேர்ந்து பணியாற்றும்போது, சகோதரர்கள் ஒருவருக் கொருவர் தீர்க்கதரிசனம் கூறிக்கொள்ள முடியும்! சபையின் பல்வேறு நிகழ்ச்சிகளில், உற்சாகப்படுத்தி! ஆறுதல் செய்து! அவர்களை ஒரே குடும்பமாய் கட்டுவதற்கு எல்லோருமே பாடுபட முடியும்! உங்கள் சிறுவர் ஞாயிறு பள்ளியில் கூட, இன்றுள்ள அநேகம் பிள்ளைகள் சிறைப்பட்டு இருக்கிறார்கள்! ஒரு சண்டே ஸ்கூல் ஆசிரியர் இதுபோன்ற **சிறைப்பட்ட பிள்ளைகளுக்கு தீர்க்கதரிசனம் உரைத்து,** அவர்களையும் ஒரு குடும்பமாய் கட்ட முடியும்! இவ்வாறு சிறைப் பட்டவர்களை விடுதலையாக்கும் தீர்க்கதரிசன பணியை நாம் பல்வேறு ரூபத்தில் **'எல்லோரும்' செய்திட** வாஞ்சை கொண்டவர்களா யிருக்க வேண்டும்.

**ஆகிலும், கடைசியாக நாம் தியானிக்கும் சங்கீதம் 68:6-ம் வசனத்தில் "துரோகிகள் அல்லது முரட்டாட்டம் செய்பவர்கள் மாத்திரமே" வறண்ட பூமியில் தங்குவார்கள்.**

இவ்வாறு சபையாகிய குடும்பம் கட்டப்படும் பலத்த கிரியையில், ஏதாகிலும் ஒரு வகையில் தங்கள் இருதயத்தின் ஆழத்தில் 'சிறிதேனும் முரட்டாட்ட ஆவி' வைத்திருப்பவர்கள், **பல ஆண்டுகள் சபையில் இருந்தாலும் வறண்ட பூமியில் தங்குவார்கள்** என்ற எச்சரிப்பும் தேவன் கட்டும் குடும்பத்தில் இருக்கத்தான் செய்கிறது! ஆனால் குடும்பத்தி லிருக்கும் நாம் அனைவருமே இந்த வறட்சிக்கு விலகி ஓடி, எப்போதும் குடும்ப ஐக்கியத்தில் பசுமை கொண்டவர்களாய் வாழ தேவன் கிருபை செய்வாராக! ஆமென்.

## ‘தகுதியின்மை’ உணர்ந்தோரை தகுதிப்படுத்தும் ஆண்டவர்!

*தெய்வ சிநேகத்தோடு நான் நெருங்கி வாழ்ந்த இந்நாட்களில், பாரீஸ் பட்டணத்திற்கு நான் செல்ல வேண்டியதாயிருந்தது. அப்போது முன் பின் தெரியாத ஒரு தேவாலயத்திற்குள் நான் பிரவேசித்தேன். அங்கு அறையில் தியானித்துக் கொண்டிருந்த பரிந்துரையாளரின் விஸ்தாரமான ஜெப அறைக்குள் சென்று, மண்டியிட்டு, தேவனை மனதில் நிறுத்தி நான் மனதில் கொண்டிருந்த பாரங்களை அறிக்கை செய்து, பரிந்துரையாளர்கூட கேட்க கூடாதபடி வாயசைத்து ஜெபித்தேன். என் ஜெபத்தின் ஒரு வார்த்தையைக் கூட கேட்காத அந்த பரிந்துரையாளர், என்னைப் பார்த்து “மகளே நீ எவ்விடத்திலிருந்து வந்த பெண் என்று எனக்குத் தெரியாது. நீ யாருடைய மனைவியோ அல்லது விதவையோ அதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் உனக்கு கூறும்படியான ஒரு உந்துதல் நான் பெற்றேன்! அது என்னவெனில், ‘நீ செய்யும்படி கர்த்தர் உனக்கு என்ன காண்பித்தாரோ அதை நீ நடை முறைப்படுத்துவாயாக’ என உரைக்கிறார்” என கூறினார். நான் அதற்கு மாறுத்தரமாக “தேவ தாசனே, சிறு குழந்தைகளை வைத்திருக்கும் ஒரு விதவை பெண்மணி நான். கர்த்தர் என்னிடம் எதைக் கேட்கிறாரோ அதை நான் செய்திட அர்ப்பணிக்கிறேன். இப்போதுள்ள என் மன பாரமோ என் பிள்ளைகளை தெய்வ பயத்துடன் நடத்தி, அவர்களுக்கு சிறப்பான கல்வியை நான் வழங்குவதுதான்” எனக் கூறினேன்.*

**அதற்கு அந்த தேவதாசன் “உன்னுடைய தற்கால நிலைமை எனக்குத் தெரியாது. ஆனால் தேவன் உன்னிடம் எதிர்பார்ப்பதை நீ அவருக்குத் தந்து விட்டால், அவருடைய சித்தம் நிறைவேற்றுவதற்கு இந்த உலகத்தில் யாதொரு சத்துவமும் உன்னை தடை செய்திட முடியாது! உன் பிள்ளைகளும் உன் பிள்ளைகளின் கல்வியும்கூட இறைவனுடைய பணிக்கு தடையாய் நிற்ப தற்கு தேவன் அனுமதிக்க மாட்டார்” என ஒளி நிறைந்த பிரகாசத்துடன் கூறினார்.**

*நான் ஜெனிவாவிற்கு செல்லும்படி உந்தப்பட்ட கர்த்தரின் ஏவுதல் குறித்து யாதொன்றும் அவரிடம் நான் கூறவில்லை. ஆகிலும் அவர் கூறிய அனைத்தும், நான் செல்லவேண்டிய பாதையை மீண்டும் உறுதிப்படுத்துவதாயிருந்தது. கர்த்தர் எனக்கு சொன்னபடி செய்வதற்கு “சகலத்தையும் விட்டு விட” என்னை தாழ்மையுடன் சமர்ப்பித்தேன். இவ்வாறு என்னை அவருடைய பலிபீடத்தில் வைத்த சமர்ப்பணத்தை ஏதோ பெரிய தியாகமாக நான் எண்ணவில்லை. இதனிமித்தமாய், தேவன் எனக்கு யாதொன்றும் பிரதிபலன் செய்வார் என்றும் என் மனதில் அகந்தை கொண்டிருக்கவில்லை! என்*

*உள்ளத்தில் படிந்திருந்த மகிழ்ச்சி எல்லாம்* "**என் சித்தம் தேவனுடைய சித்தத்தோடு கலந்து விட்ட கடமையாகவே எண்ணி திருப்தி கண்டேன்**".

*இச்சமயத்தில் எனக்குப் பழக்கமாயிருந்த ஒரு நண்பர் 'சியாம்' பட்டணத்திற்குச் செல்வதாக கூறினார். அவர் என்னுடைய தங்கு மிடத்திலிருந்து சற்று அருகில்தான் இருந்தார். தான் போவதைக் குறித்த திட்டத்தை என்னிடம் கூறியபோது "நானும் ஜெனிவா பட்டணம் செல்வதற்குரிய பாரம் கொண்டிருக்கிறேன்" என்ற என் மன விருப்பத்தைக் கூறினேன். மேலும் என் எஞ்சிய ஜீவியத்தை* **ஜெனிவாவில் அமைத்து தர கர்த்தர் நடத்துகிறார்** *என நான் கூறியதைக் கேட்டவுடன், 'ஜெனிவா பிஷப்' இப்போது பாரீஸ் நகரிற்கு வந்திருக்கிறார் என்ற தகவலைக் கூறினார். அது, என்னுடைய வழியை செவ்வைப்படுத்துவது போலிருந்தது. இருப்பினும் நேரடியாக பிஷப்பை பார்ப்பதற்குப் பதிலாய், தந்தை-லா-கோம்பே அவர்களுக்கு கடிதம் எழுதியபின் செல்வது நல்லது என்று கூறினார்.*

*என்னுடைய தகவலை அறிந்த பாரீஸ் நகரத்தின் பிஷப் என்னோடு பேசினார். அவருடைய வாசஸ்தலத்தில் சென்று நான் பேசியபோது, நான் அவரிடம் "ஜெனிவா பட்டணத்திற்கு, என் முழுமையும் எடுத்து சென்று அங்கேயே வாசம் செய்வதுதான் எனக்கு தேவன் தந்த உந்துதல்! மேலும், என்னை தேவனுடைய பணிக்கு முற்றிலும் அர்ப்பணித்து விடவும் நான் தீர்மானித்துள்ளேன்" என நான் கூறியதைக் கேட்ட தலைமை போதகர்* "**உன்னுடைய தேவ நடத்துதல் பூரணமாய் இருப்பதை நான் காண்கிறேன்**" *என அங்கீகரித்தார்.*

*இப்போது நான் ஜெனிவா செல்ல உந்தப்பட்ட பயணம் இலகுவாய் மாறியதைப்போல் கண்டேன். கர்த்தர் நடத்தும் பாதைக்கு எதிராக யாதொன்றும் வைத்திருக்க நான் விரும்பவில்லை. என் முழு ஜீவியத்தின் உடைமைகளையும் ஜெனிவாவில்தான் இருக்க வேண்டும் என கர்த்தருடைய சித்தம் இருக்குமென்றால், "அதை யார் மறுத்து அறியக்கூடும்?" என்றே எனக்கு நான் கேள்வி கேட்டுக் கொண்டேன்.*

*பாரீஸிலிருந்த 'நவயுக கத்தோலிக்க' தலைமை சகோதரியை நான் காணச் சென்றேன். நான் பேசிய அனைத்தையும் கவனித்துக் கேட்ட அவர்கள், என்னோடு சேர்ந்து மிகவும் களிகூர்ந்தார்கள். கர்த்தருடைய பணிக்கு நீ என்னோடு சேர்ந்து பயணம் வரலாம் என அங்கீகரித் தார்கள். அந்த அம்மையார் தலைசிறந்த தேவ ஊழியர் என்பதை நான் ஏற்கெனவே கேட்டிருந்தேன். இப்படி ஒரு சிறந்த ஊழிய அன்னையை எனக்கு சாதகமாய் காண்பித்த ஆண்டவருக்கு நன்றி கூறினேன்.*

*நானும் கர்த்தருக்கு ஊழியம் செய்திட முடியுமோ? என,*

*என்னைப் பார்த்து நான் கேட்டுக் கொண்டேன்.* **நான் தகுதியற்றவள் என்பதை உணர்ந்தேன்.** *இப்போது என் கண்களைத் திருப்பி தேவனை நோக்கிப் பார்த்தேன். அவரையும் அவருடைய வல்லமையையும் நான் கண்டபோது, எனக்குள் ஓர் நிம்மதி பெருமூச்சு ஏற்பட்டது. இந்த சமயத்தில்தான் எனக்கு ஒரு சத்தியம் வெகு தெளிவாய் மனதில் பட்டது! அதுஎன்னவெனில் "என் இயலாமையையும்,* **என் தகுதியின்மையையும்** *நான் எவ்வளவு ஆழமாய் உணர்ந்திருக்கிறேனோ 'அந்த அளவிற்கு' கர்த்தர் என்னை தகுதிப்படுத்த சித்தம் கொண்டிருக்கிறார்" என்ற சத்தியம் அறிந்து அகமகிழ்ந்தேன்!*

*– மேடம் குயான்*

---

## உங்கள் அன்பு மேலோட்டமானதோ? சோதித்தறியுங்கள்!

*தூய்மையான கிறிஸ்தவ மனப்பான்மையே தேவனுடைய பார்வையில் மேன்மையானதாகும்! மனுஷருடைய பார்வையில், தோற்றத்திற்குரிய நிகழ்வுகளும் அல்லது சம்பவங்களும் மேன்மை யானதாகத் தோன்றக்கூடும். அதுபோன்ற சம்பவங்கள் நம்முடைய மனநிலையை பெருமையடையச் செய்யலாம், அல்லது மோசமான பிரதிபலிப்பை காண்பித்து நம்மை கர்த்தரை விட்டு விலகச் செய்யலாம். அநேக கிறிஸ்தவர்கள், ஒருவரொடொருவர் நல்ல ஐக்கியம் கொண்டிருப்பதைப்போல் இருக்கிறார்கள். ஆனால் ஓர் திடீரென்ற 'ஆவிக்குரிய மாறுபாட்டை' அவர்கள் சந்திக்கும்போது, அந்த இருவரில் ஒருவர் மிகுந்த மனத்தாங்கலடைந்து, தன் சக-விசுவாசிகளிடமிருந்து தன்னை விலக்கிக் கொள்கிறார்! அது முதற் கொண்டு, அந்த சகோதரனைக் குறித்த குறைபாடுகளையும் குற்றஞ் சாட்டுதலையும் போகுமிடமெல்லாம் தூற்றிச் செல்லுகிறார். ஆகிலும் சபைக்குள் வரும்போது அவர்கள் ஒருவருக்கொருவர் 'ஹாய்' என வாழ்த்துவதும் 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என கூறிக்கொள்வதும் வெகு நேர்த்தியாய் செய்து விடுகிறார்கள். அதில் எந்த குறைச்சலும் இருப்பதில்லை. ஆனால் அவருடைய உள்ளான மனநிலையோ* **'ஒருமனமாய்' இல்லாமல்,** *பல்வேறு குற்ற நோக்கங்களை உடையதாய் பாழ்பட்டு கிடக்கிறது! இதுபோன்ற ஒரு கிறிஸ்தவ மனநிலை அபாயம் நிறைந்ததாகும். அது ஏனென்றால்.... இவர்கள் நிற்கின்ற இடம் 'நடந்த உண்மையை' ஆதாரமாய் வைத்து, தங்களையே நியாயப்படுத்தும் அபாயமாயிருக்கிறது. இவ்வாறு சகோதரர்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகளுக்குரிய காரணங்கள் 'உண்மையாகவே' இருக்கிறது! ஆனால், அதனிமித்தம் அவர்கள் நடப்பித்த 'பிரதிபலிப்புகள்'* (Reactions) *முற்றிலும் மாம்சத்திற்குரியதாயிருக்கிறது!*

**இவ்வாறு ஒருவருக்கொருவர் கொண்ட அன்பில் பாதிக்கப்படுவது ஆவிக்குரிய பெரு நஷ்டமாகும். இதற்கு நேர்மாறாக ஒருவருக்கொருவர் எத்தனை முரண்பாடுகள் (சத்தியத்தை மறுப்பது தவிர) நிலவினாலும் சகோதரனோடு கொண்ட கிறிஸ்தவ சிநேகம் இன்னும் அதிகமாக வேண்டுமே அல்லாமல், அது ஒருக்காலும் குறைந்துவிடக்கூடாது.**

*பேதுருவும் பவுலும் இதற்கு நல்ல மாதிரியாக இருக்கிறார்கள். பேதுருவிடமிருந்த சில குறைகளை பவுல் எடுத்துக் கூறியபோது, அதற்கென பேதுரு சிறிதுகூட மனஸ்தாபப்படவில்லை. அந்த பேதுரு ஏற்கெனவே தன் குருவாகிய இயேசுவினால் 'அப்பாலே போ சாத்தானே!' என்ற கடினமான புத்திமதியை கேட்டும்* **மனம் புண்படாத ஓர் நல்ல சீஷன்!** *பவுல் பேதுருவிடத்தில் கூறிய சில வாசகங்கள் அறிகிறதற்கு அரிதாய் இருந்ததாகவே பேதுரு கூறிக் கொண்டாலும்,* **சகோதர அன்பிலிருந்து தான் விலகிடும் 'கேடு வராதபடி'** *காத்துக் கொண்ட ஓர் உத்தம சீஷனாய் பேதுரு ஒளி வீசினார் (2பேதுரு 3:16).*

*தன் சக கிறிஸ்தவ சகோதரர்களிடம் வெகு சீக்கிரத்தில் அன்பு தாழ்ச்சி அடைபவர்கள் யாராயிருந்தாலும், அவர்களின் கிறிஸ்தவம் 'அன்பற்றது' எனக்கூறுவது மாத்திரமல்லாமல், அவர்களின் முழு கிறிஸ்தவ ஜீவியமும் "மேலோட்டமானது!" என்றே கூறவேண்டும். நாமும், நம்முடைய சபையும் அதுபோன்று இல்லாதிருக்க தேவன் கிருபை செய்வாராக.* **உங்களின் ஸ்தல சபை** *அன்பில் செழித்தூண்றி, ஓங்கி நின்று தேவனை மகிமைப்படுத்துவதாக!*

*– A.W. டோசர்*

---

## 'அவமானம் மேற்கொள்ள' உம் சிலுவை தியானம் போதும்!

**தே***வன் அவரவர்களுக்கென்று ஒப்புவித்த ஊழியங்கள் உண்டு! அதுபோலவே அவரவர்களுக்கென்று ஒப்புவித்த ஆத்துமாக்களும் உண்டு! பொதுவான ஊழியப்பிரயாசங்கள் அதிகமான பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஆனால் ஆத்துமாக்களுக்கு செய்திடும் ஊழியப் பணிகள் பல்வேறு விதத்தில் பாதிப்பு ஏற்படுத்தும்.*

**'ஜனங்களுக்கு செய்த ஊழியத்தில்தான்' இயேசு தவறாய் கணிக்கப்பட்டு, தவறாய் புரிந்து கொள்ளப்பட்டு, தன் சொந்த ஜனங்களால் கொலையும் செய்யப்பட்டார்!**

*இதுதான் சத்தியம் என்று எனக்குத் தெரிந்திருந்தாலும், தேவன் என்னிடத்தில் ஒப்படைத்த ஆத்துமாக்களுக்கு செய்த ஊழியங்களில், யாதொன்றும் தீமையல்ல, முழுவதும் நன்மையே அவர்களுக்கு செய்து முடித்தேன். ஆனால் என் ஊழியத்தினிமித்தம் நன்மை பெற்ற அந்த*

*ஆத்துமாக்கள் 'நன்றி' கூறாவிட்டாலும், என்னைத் தவறாய் புரிந்து கொண்டு யாதொரு நா கட்டுப்பாடு இல்லாமல், துணிகரமாய் தீது பேசத் தொடங்கிவிட்டார்கள்! அதை அவர்கள் மற்றவர்களிடத்திலும் பரப்பி, என்மீது நிந்தையும் அவமானமும் வரும்படி செய்தார்கள்!*

*நன்மைக்குத் தீமை பேசும் என் சொந்த ஜனங்களின் நிலையை நான் யோசித்துப் பார்த்து, வெகுவாய் மனம் துவண்டு வருத்தமடைந் தேன். ஒரு சில நாட்கள் கடந்து சென்றபின்பும், அந்த வருத்தமான சிந்தை என் உள்ளத்தை ஆட்கொண்டிருந்ததைக் கண்டேன். இந்த சரியான வேளையில், ஆவியானவர் எனக்கு உணர்த்தி உதவி செய்தார். "தீது பேசும் மக்களை, நீ கர்த்தரிடமே ஒப்புவித்திருக்கலாம்!" என பேசினார். உண்மை தான்,* **இதுபோன்ற சமயங்களில் சிலுவை தியானத்தின் வலிமை** *உன்னை ஆட்கொள்ள அனுமதித்திருக்கலாம்! என உணர்த்துவிக்கப்பட்டேன்.*

> **என்னுடைய குருவாய் முன் சென்றவர், சிலுவையில் எத்தனை அவமானங்கள்பட்டார்! அத்தனையும், அவர் மூலம் நன்மை பெற்ற ஜனங்களிடமிருந்து வந்தவைகள்!**

*ஆனால் கிறிஸ்துவோ, வெகு அமரிக்கையான சாந்தகுணமுள்ள வராய் 'அந்த ஜனங்களை மன்னிக்கும்' திவ்விய வசனங்களை சாந்தமாய் பேசினார்! ஜனங்களின் அவமானத்தால் சூழப்பட்டிருந்த ஆண்டவர் இயேசு, தன் தெய்வ சமாதானத்தை சிறிதுகூட இழக்கா திருந்தார்! ஓ கர்த்தாவே, நன்றியில்லாமல் தீதுபேசிய ஜனங்களைக் குறித்து நான் அடைந்த மனவேதனைக்கு வருந்துகிறேன்.* **உம்மைக் குறித்தும் உம்முடைய சிலுவையைக் குறித்தும் நான் கொண்டிருக்கும் தியானம்,** *என்னை விட்டு விலகாதிருக்க அருள்புரியும்! அப்போது, நானும் உம்மைப் போலவே எனக்கு ஒப்புவித்த ஊழியத்தை மகிழ்ச்சி யோடும் மன உருக்கத்தோடும் செய்து முடிப்பேன்! என ஜெபித்தேன்.*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## சோதோமின் அழிவும், தேவ ராஜ்ஜியத்தின் வருகையும்!

**நா***ம் வாழும் காலம் 2பேதுரு 2:5-ம் வசனத்தின் படியான ஐந்து குறிப்புகளைக் கொண்டது. அது என்னவெனில் 1)தேவனுடைய நியாயத்தீர்ப்பு 2) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை 3) தேவனுடைய அன்பு 4) உலகத்தின் காலச்சக்கர முடிவு! காலச்சக்கரத்தின் முடிவு* (End of the age) *என்பது உலகத்தின் முடிவு அல்ல. ஆனால், இருளின் அதிபதியாகிய சாத்தான் இந்த உலகை ஆண்ட காலம் முடிந்து, கிறிஸ்து திரும்ப வரும் நியாயத்தீர்ப்பின் நாள் தொடங்கும் என்பதே யாகும்!*

**கடைசி காலத்தை குறிப்பிட்டு காண்பிக்கும்படி 'சோதோம் கொமோராவின் அழிவு' இந்த வசனங்களில் திருஷ்டாந்தமாக அருளப்பட்டிருக்கிறது.**

இதுபோன்ற கடைசி கால முடிவின் வரிசையில் நம் யாவருக்கும் நம்பிக்கை தருவதெல்லாம் "நோவா முதலான எட்டு பேரைக் காப்பாற்றிய" அவரது அன்பும் இரட்சிப்புமேயாகும்! இந்த வசனத்திற்கு முன் உதாரணமாய் சோதோம் கொமோரா பாவ வாழ்க்கையும், அதன்மீது விழுந்த தேவனுடைய ஆக்கினையும் நமக்கு எச்சரிப்பாக அடுத்த 6-ம் வசனத்தில் எழுதப்பட்டுள்ளது.

சோதோம் கொமோரா என்பது ஓர் பெரிய பட்டணம்! அங்கு தான் 'சவக்கடல்' இருக்கிறது. ஆனால் ஆரம்ப காலத்தில், இந்த சோதோம் கொமோரா பட்டணம் பசுமை நிறைந்த பட்டணமாய், இந்த சவக்கடல் செழிப்பான நதியாகவும் இருந்தது. இந்த இடத்தை தெரிந்து கொண்ட லோத்து, ஆபிரகாமிடம் வந்து தன் மந்தைக்கும் ஆபிரகாம் மந்தைக்கும் ஏற்படுகிற வாதத்தைக் குறிப்பிட்டு கூறினான். அதற்கு ஆபிரகாம் "அப்படியானால், நீ உன் மந்தையோடு வலப்பக்கம் போனால் நான் இடப்பக்கம் போகிறேன். நீ கிழக்கே போனால் நான் மேற்கே போகிறேன்" என தாராளமாய் கூறினார். நாலாதிசையிலும் சுற்றிப்பார்த்த லோத்து, இந்த பசுமையான செழித்த நகரத்தையே தனக்கென கேட்டார்! ஆனால் 9-ம் வசனம் குறிப்பிடுகிறபடி சோதோம் கொமோராவில், ஒவ்வொரு நாளும் காமவிகாரமும், அசுத்த இச்சைகளும், தெய்வ பண்புகளை தூஷிப்பவர்களும் பெருகிக் கொண்டே இருந்தார்கள். 'பாவம் அதிகரித்த நிலையில்' தேவனுடைய நியாயத்தீர்ப்பு அந்தப் பட்டணத்திற்கு வந்தது. கந்தகமும் அக்கினியும் கொண்டு கர்த்தர் நியாயந்தீர்த்தார்.

**சோதோம் கொமோராவின் மீது தேவன் ஏன் நியாயத்தீர்ப்பை அனுப்பினார்? இந்த மகா பட்டணத்து ஜனங்கள் 'ஒரு பொய்யான பாதுகாப்பை' நம்பி வாழ்ந்தார்கள்.... அது, பணம் என்ற பாதுகாப்பு! தங்கள் உயிரைப் பாதுகாக்கும் வலிமையான இராணுவ பாதுகாப்பு! போன்ற இவர்களின் பாதுகாப்பை தேவன் கவிழ்த்துப் போடவே தீவிரம் கொண்டார்.**

இன்று உலகில் உங்களைச் சுற்றி நடந்து கொண்டிருக்கிற செயல்கள் அனைத்தும், மனுஷன் வைத்திருக்கிற பொய்யான பாதுகாப்பின் நம்பிக்கையை தேவன் கவிழ்த்துப் போடுவதையே காண்கிறோம்! அன்றும் எகிப்திய பார்வோன் அதிபதி, தேவனுக்கு விரோதம் செய்து, அவரை எதிர்த்து நின்றதற்கு காரணம், தன் குதிரை பலத்தையும், இரதங்களின் பலத்தையும், தன் ஈட்டிகளின் பலத்தையும் நம்பியிருந்தபடியால், "**எகிப்திய பெலனை எல்லாம்**" செங்கடலில்

*அழித்துப் போட தேவன் சித்தம் கொண்டிருந்தார்!*

*இவ்வாறு பொய்யான பாதுகாப்பில் நம்பிக்கை கொண்டிருந்த சோதோம் கொமோரா பட்டணத்தின் அடுத்த பாவம் என்னவெனில் "இச்சை கொண்ட காமவிகாரமே" ஆகும்! யோபு தன் புத்தகத்தில் கூறும்போது "துன்மார்க்கனின் மகிழ்ச்சி அற்ப நேரம்" எனக் குறிப்பிட்டார். அற்ப நேர இன்பத்திற்காக, நித்தியத்தை இழப்பது மதியீனமல்லவா? சிற்றின்ப மோகங்கள் ஒருவனை சும்மா விடுவதில்லை. அவனுடைய மகிழ்ச்சியை பறித்து, பாழாக்கும் குற்ற உணர்வை அவன் நெஞ்சிலே வைத்துவிடும். "தேவன் இல்லையென்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான்" (சங். 53:1). இந்த வசனம் எபிரெய மூல பாஷையில் "மதிகேடன் தன் இருதயத்தில், தேவனைப் பார்த்து 'உமக்கு இடமில்லை' என்றே கூறிக் கொள்கிறான்.*

**இங்கு கூடியிருக்கிற அனைவருமே 'தேவன் ஒருவர் இருக்கிறார்' எனக் கூறும் ஜனங்கள்தான்! ஆனால், இந்த திரள் கூட்ட ஜனங்களில் பெரும்பாலோர் "தேவனுக்கு மறுப்பு கூறி, இல்லை" என்றே கூறி வாழ்கிறார்கள். அவரது கற்பனைகளையோ அல்லது அவரது எச்சரிப்பையோ சிறிதும் மதிப்பதில்லை!**

*திருஷ்டாந்தமாய் கூறப்பட்ட அந்த மகா பெரிய பட்டணத்தின் மூன்றாவது பாவம் என்னவெனில், அவர்களின் பெருந்திண்டியும் அதனால் ஏற்பட்ட வெறியுமேயாகும். **இந்த குறிப்பிட்ட பாவங்கள் அனைத்தையும் நம் இருதயத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு பணம் இருந்தால் போதும்!** ஆனால், இதினால் வரும் கேடு என்னவெனில் 'துன்மார்க்கத்தின் வலிமை அவர்கள் மீது கொடிய பாரமாய்' இறங்கும்! என்றே லூக்கா 21:34-ம் வசனம் கூறுகிறது. இதனிமித்தமே, காலத்திற்கு முன்பாக நீங்கள் மரிப்பது மாத்திரமல்லாமல், உங்கள் ஆத்துமாவில் தேவனை இழந்து தவிப்பீர்கள்! இதுபோன்றவர்கள் தேவனுடைய அன்பில் தங்களையும் இணைத்து கலந்து கொள்வதைப் போல் பாசாங்கு செய்து விட்டு, உலகத்தையும் உலகத்தின் இன்பங்களையும் அதன் களியாட்டுகளையும் ரசிப்பதற்கு நாடுவார்கள், சபையாகிய அன்பின் விருந்தில், இந்த கிறிஸ்தவர்கள் ஒரு கறையாக இருக்கிறார்கள்!*

*மேலும் இந்த சோதோம் கொமோராவில் 'அந்நிய தேவர்கள்' வாசமாயிருப்பார்கள். நீங்கள், தேவனைவிட மேலாய் எதை வைத்திருந் தாலும், அதுவே உங்களுக்கு 'அந்நிய தேவனாக மாறி' அதை வைத்து விக்கிரகாராதனையில் ஈடுபடுவீர்கள். இந்த கிறிஸ்தவ உலகில், அநேக ஜனங்கள் விக்கிரகாரதனையில் தாங்கள்*

ஈடுபட்டிருப்பதை, அவர்களே அறியாதிருக்கிறார்கள்! இதைக் குறிப்பிட்டு ரோமர் 1:25-ம் வசனம் கூறுகையில் "இவர்கள் **சத்தியத்தை பொய்யாக மாற்றி,** சிருஷ்டிகரை தொழுது சேவியாமல், சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள்" என கண்டித்து கூறுகிறது. இன்று ஜனங்கள் ஆடம்பரத்திலும் அழகு சாதனங்களிலும் விலையுயர்ந்த வாசனை திரவியங்களிலும் மனது வைத்து தங்கள் சொந்த சரீரத்தையே ஓர் விக்கிரகமாய் வைத்து தொழுது கொள்கிறார்கள். சோதோம் கொமோராவின் மற்றொரு குணாதிசயம் அவர்களின் பேராசை!

**தேவை என்பதை மிஞ்சி வரக்கூடிய அனைத்தும் பேராசை. பேராசைக்கு மற்றொரு பெயர் சூதாட்டம்! சூதாட்டவெறி இவர்களை ஆட்கொள்கிற படியினால் தேவைக்கு மிஞ்சி பணம் சேர்ப்பதற்கு அதிக நேரம் இந்த மண்ணில் உழைக்கிறார்கள்!**

இதுபோன்று பணத்தை சம்பாதிக்கும் 'சூதாட்டத்தில்' தங்கள் குடும்பங்களை அலட்சியப்படுத்துகிறார்கள்! 'நம் எல்லா தேவைக்கும்' கர்த்தர் துணை நிற்பார்! ஆனால், ஆடம்பர வாழ்விற்கான பேரா சைக்கு கர்த்தர் விலகி நிற்கிறார்!

இவ்வாறான சோதோம் கொமோராவின் ஆடம்பர உச்ச கட்டத்தில்தான், தேவன் அவர்களை கைவிட்டுவிட்டார்! இதனிமித்த மாய் தேவன் **அவர்களை அவர்களின் பாவத்திற்கே ஒப்புக்கொடுத்து கை விட்டார்!** இதேபோன்ற வார்த்தை திரும்பத்திரும்ப மூன்று இடங்களில் ரோமர் 1-ம் அதிகாரத்தில் தேவன் கூறினார். இப்படித்தான் தேவன் உங்களையும் கைவிட்டு விட்டாரோ? நிச்சயமாய் இல்லை! அதுஏனென்றால், நீங்கள் இந்த செய்தியை வாசிப்பதே, நீங்கள் மீட்கப்பட மற்றொரு சந்தர்ப்பத்தை உங்களுக்கு தருவதற்குத்தான். ஆகவேதான் இதை வாசிக்கிற அனைவரையும் பார்த்து, நீங்கள் இன்னமும் தேவனால் கைவிடப்படவில்லை என உறுதியாக கூறுகிறேன். இன்றும் நீங்கள் தேவனுடைய ஈவை உணர்ந்து கிறிஸ்துவிடம் நெருங்கி வர உங்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது!

2தீமோத்தேயு 3:1-ல் "கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரிய ராகவும் பணப்பிரியராகவும் என நீண்ட பட்டியலில் ஆரம்பித்து தேவபிரியராயிராமல் சுகபோக பிரியராய் இருப்பார்கள்" என முடிக்கிறது (2தீமோ.3:1-4). என் பேத்தி (என் மகளுடைய மகள்) படித்த கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது. அதற்கு நானும் சென்றிருந்தேன். அதுஏனென்றால், என் பேத்தியின் தேவ பக்தியையும், அதனிமித்தம், அந்த கல்லூரியில் அவள் அடைந்த நிந்தை அவமானங்

*களையும் நான் அறிந்திருக்கிறேன். பரிசுத்தாவியின் முழு பெலனையும் கொண்டு அவள் பாவத்திற்கு சமரசம் செய்யாமல் வாழ்ந்தபடியால் தன்னுடைய வகுப்பில் அவள் தனித்து விடப்பட்டாள்!*

**முடிவில், அவள் பட்டம் வாங்கி வெளியில் வந்தபோது ஒரு உத்தம கிறிஸ்தவளாய் கெம்பீர நடைகொண்டு எங்களோடு சேர்ந்து வெளியே வந்தாள்! இப்படித்தான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டு ஜீவித்திட வேண்டும்!**

*இப்போது தேவன் என்ன செய்யப்போகிறார்? துன்மார்க்கமான சோதோம் கொமோராவை அழிக்கப்போகிறார்! அச்சமயத்தில், ஆபிரகாம் குறுக்கிட்டு "தேவனே சோதோமில் ஐம்பது நீதிமான்கள் இருந்தால் அதை அழித்துவிடக்கூடாது" என வேண்டினான். தேவனும் அதற்கு சம்மதித்தார். ஆனால் துரதிருஷ்டமாய் அவ்வளவு பெரிய பட்டணத்தில் ஐம்பது நீதிமான்கள்கூட இல்லை. எண்ணிக் கையை கொஞ்சகொஞ்சமாய் குறைத்து "பத்து நீதிமான்கள் இருந்தால் அழிப்பீரோ?" எனக் கேட்டு அவ்வளவு கூட இல்லை என அறிந்து துக்கமடைந்தார்.*

**இதை வாசிக்கும் நீங்கள் முழு சத்தியத்தையும் நன்றாய் அறிந்து கொள்ளுங்கள். "ஒரு திரள் கூட்டத்தை அல்ல. குறைவான பக்தியுள்ள மக்களுக்கே தேவன் இன்றும் மதிப்பு தருகிறார்" என்பதை உணர்ந்து வாழுங்கள்.**

*"சீயோன் குமாரத்தி திராட்ச தோட்டத்திலுள்ள ஒரு குச்சு போலவும், வெள்ளரி தோட்டத்திலுள்ள ஒரு குடிசையைப்போலவும், முத்திரையிடப்பட்ட ஒரு பட்டணம் போலவும் மீந்திருக்கிறாள்! சேனையின் கர்த்தர் தமக்கென கொஞ்சம் மீதியை வைக்காதிருந் தாரானால், நாம் சோதோமைப் போலாகி கொமோராவிற்கு ஒத்திருப்போம்" எனக்கூறும் ஏசாயா 1:8,9 வசனங்களில் "**மீந்திருக்கும்**" வார்த்தையை கவனித்துப் பாருங்கள்!*

*இந்த உலக காலச்சக்கரத்தின் முடிவில் உச்சக்கட்டத்திற்கு நாம் வந்துவிட்டோம். அது, "**தேவன் வழங்கும் நியாயத்தீர்ப்பு!**" நமக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு இயேசு கிறிஸ்துவிடம் மனந்திரும்பி வருவது தான். இந்நாட்களிலேயே, இந்த உச்சகட்டமான நியாயத்தீர்ப்பு வரப்போகிறதென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அவர் வந்து, தன்னுடைய ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கப் போகிறார்! சோதோமின் பாவங்களையும், சத்துருவாகிய பிசாசையும் ஒன்று சேர்த்து அழிக்கப் போகிறார். அவர் வரும் அந்தப் பொன்னாளில், பரலோகமே இந்த பூமிக்கு வந்ததாய் மாறிவிடும்! ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்.*

– *'தேவனுடைய படைதளபதி' என அழைக்கப்பட்ட* பில்லிகிரஹாம்

# ஆஸ்கார் ரொமிரோ,

## சபையை பாதுகாக்க, உயிர் நீத்த நல்ல மேய்ப்பன்!



(1917 - 1980)

மத்திய அமெரிக்காவில் ஜனத்தொகை நிறைந்த *எல்சால்வாடர்* என்ற தேசத்திற்கு 1977-ம் ஆண்டு ஆஸ்கார் ரொமிரோ ஆர்ச் பிஷப்பாக பொறுப்பேற்றார். அரசோடு இருந்த ராணுவம் காப்பி எஸ்டேட் எளிய கிறிஸ்தவ மக்களை கொடுமை செய்து, உரிமைகளைப் பறித்து துன்புறுத்தின! இவ்வித செயல், கிறிஸ்தவ சகோரத்துவத்திற்கும், இரக்கத்திற்கும், அன்பிற்கும் விரோதமானது என, ஆஸ்கார் ரொமிரோ கிறிஸ்தவ ஏழை மக்களின் துன்பம் நீக்க, அன்றிருந்த அமெரிக்கா ஜனாதிபதி ஜிம்மிகார்டர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார்! அதை அறிந்த எல்சால்வாடர் அரசும், ராணுவமும் கோபமடைந்து ஆஸ்கார் ரொமிரோ நடத்திய சபைக்கு பல துன்பங்களைத் தந்தனர்.

1980-ம் வருடம் மார்ச் 24-ம் தேதி எல்சால்வாடர் அரசின் இராணுவத்திலிருந்த, இயேசுவின் மன உருக்கத்தை நாடிய சிப்பாய்கள் ரொமிரோவை ஆலயத்திற்கு வந்து சந்தித்தார்கள். அவர்களுக்கு தேவ செய்தியை ரொமிரோ வழங்கினார். அவர் மிகுந்த வருத்தத்தோடு பிரசங்கித்தாலும், ஏழை எளிய கிறிஸ்தவர்களுக்கு விரோதமான அரசின் இராணுவ பணியில் உள்ள அவர்களிடம் "நீங்கள் யாவரும் அரசின் ஆணைக்கு உட்பட்டவர்களாய் பணிபுரிய வேண்டியது அவசியம். அதேசமயம், ஏழை கிறிஸ்தவ உழைப்பாளிகளை அழிப்பதற்கும், அடிப்படை மனித உரிமைகளை அழிப்பதற்கும் அரசு தரும் கட்டளைகளை நீங்கள் ஒருபோதும் செயல்படுத்தாதிருக்க கவனம் கொள்ளுங்கள்" என அவர்களுக்கு வலியுறுத்தி பிரசங்கித்தார். ஜெபம் செய்து முடித்து, பிரசங்கபீடத்தின் மையப்பகுதியில் அவர் வந்து நின்றவுடன், ஆலயத்தின் வாசலில் ஓர் சிகப்பு இராணுவ வாகனம் வந்து நின்றது. அதிலிருந்து வேகமாய் ஆலயத்தின் வாசலில் நின்ற ஒருவன், ரொமிரோவை நோக்கி இரண்டு முறை சுட்டான்! இருதயத்தில் குண்டு பாய்ந்த ரொமிரோ இரத்த வெள்ளத்தில் சாய்ந்தார்! இமைப் பொழுதில், அந்த இராணுவ வாகனம் வேகமாய் சென்றுவிட்டது!

மார்ச் 30-ம் தேதி, அவரது அடக்க ஆராதனையில் சுமார் 250,000 ஜனங்கள் கண்ணீரோடு வந்து நின்றார்கள். அப்போது எழுந்து நின்று பேசிய பேராயர் ஜான்பால் "ரொமிரோ தேவனுக்கு பிரியமானவர்! மனுஷர்களுக்கு சமாதானத்தை நிலைநிறுத்திய தேவதாசன்! அவர் சிந்திய இரத்தம், இயேசு அடியார்கள் எல்லோரையும் சகோதர ஐக்கியத்திற்கு ஒருமைப்படுத்தும்! அன்பையும் பரஸ்பரத்தையும் ஏற்படுத்தும்" என உருக்கத்துடன் பிரசங்கித்தார். திரள் கூட்டத்தின் நடுவில், அரசின் ஆதரவோடு மாறுவேடத்தில் நின்ற சில சிப்பாய்கள் திடீரென்று கூட்டத்தை சுட ஆரம்பித்தார்கள். அந்த துப்பாக்கி சூட்டில் சுமார் முப்பதிற்கும் மேலானோர் மரிக்க நேர்ந்தது. இருப்பினும் இந்த குழப்பத்தின் மத்தியில் அவருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்ட பின்பும், மக்கள் சாரை சாரையாய் கண்ணீரோடு வந்து அவரது அடக்க ஸ்தலத்தில் இறைமரியாதை செலுத்தினார்கள்!

(இவரைக்குறித்த இருதயத்தை தொடும் ஓர் 8-நிமிட வீடியோ Youtube: paralogapokkishangal சேனலில் DARING BOLDNESS OF A PASTOR என்ற தலைப்பில் உள்ளது)

- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்

## 'கொரோனா' தீண்டுதலை குணமாக்கும் குருமருந்து!

ஓ, மானிடனே! இந்த முழு உலகத்தையும் ஏறெடுத்துப்பார்! குணமாக்கிட மருந்துகள் இல்லை, கண்டுபிடியுங்கள்! சீக்கிரமாய் கண்டுபிடியுங்கள்.... ஏன் தாமதம்? கிட்டத்தட்ட முழு உலகத்திலும் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் இந்த 'கொரோனா' வைரஸ் கிருமியால் அழிந்துவிட்டார்கள்.... "மருந்து எங்கே?" என்ற ஓலம் முழு உலகத்திலும் எதிரொலிக்கிறது! மருந்து ஆராய்ச்சி கூடங்கள் நிறைந்த மேலை நாடுகளாலும் 'மருந்து' கண்டுபிடிக்க முடியவில்லையே என சாமானிய மனிதர்களும் அதிர்ச்சியான வியப்படைந்து விட்டார்கள்!

"தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து

தீர்க்கதரிசிகள் செப்பிய மருந்து!

அந்த குருமருந்தை

உம்பரத்தில் நான் கண்டேன்!"

என்ற ஆதி பக்தர்களின் பரவசம் இன்று நமக்கில்லையோ? கீழே ஆராய்ச்சியைவிட, விண்ணின் பரத்தை நோக்குவதல்லவோ "தேசத்தின் பிணியைப் போக்கும் குருமருந்து". அன்றும், இன்றும், அந்த குருமருந்திற்காய் பரத்தை நோக்கினோர் யாவரும் பிழைத்திருக்கிறார்கள்! 'கொரோனா' என்ன? கொடிய விஷ சர்ப்பம் தீண்டினாலும், அவரைக்காண பரன் நோக்கியவர் யாவரும் பிழைப்பார்கள்! தேவனைத் தேடுவதும், முழங்காலிட்டு அண்ணாந்து பார்த்து கெஞ்சி ஜெபிப்பதும், நம்மிடையே ஒருவரிடமும் குறைந்துவிடக் கூடாது!

நம்முடைய மீறுதல்கள்! நம்முடைய அக்கிரமங்கள்! நமக்கு வர இருந்த ஆக்கினைகள்.... ஆகிய அனைத்தையும் தன்மேல் ஏற்று! நம்முடைய 'மரண வியாதியை' தானே ஏற்று.... நமக்கு வழங்கப்பட்ட ஒப்பற்ற குருமருந்து, நம் ஆண்டவர் இயேசு! நம்மை குணப்படுத்த, காயப்பட்டு பின்பு குணமடைந்த "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்!" என நிரூபித்த இந்த குருமருந்து ஒன்றே, நம் தேசத்திற்கும், உலக நாடுகள் அனைத்திற்கும் பூரண சுகம் தந்திட முடியும்! (ஏசா.53:5). இந்த குருமருந்தை விசுவாசிப்பவன் எவனும் சுகமடைந்து, பிழைத்திருப்பான்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.